DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 6-2023, 64-2023, 33-2024**

**Deposition of Witness for Prosecution : P.W. 32**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர். மனோகரன் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 11.02.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்சமயம் தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.08.2022ந் தேதி அன்று மாலை 4.00 மணியளவில் மணிவேல் என்கின்ற 28 வயது மதிக்கதக்க ஆண் பொது அறுவை சிகிச்சை துறையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு 7x5x2 cm அளவில் இடது முன்கையில் ஆழமான காயம் இருந்தது. இடது தோள்பட்டை அருகில் தையல் இடப்பட்ட 2 cm நீளமுள்ள காயம் இருந்தது. இடது முன்கையில் காயத்திற்காக எங்களுடைய சிறப்பு அறுவை சிகிச்சை துறையில் கருத்துரை கோரப்பட்டது. பரிசோதனையில் அவருக்கு இடது கை விரல்கள் செயல்பாடு பாதிக்கப்பட்டிருந்தது. Zone 9 extensor tendon injury and posterior interosses nerve injury இருந்தது. அன்றைய தினமே காயத்தை சுத்தம் செய்து முதல் முறை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அறுவை சிகிச்சை பின் கவனிப்பிற்கு பிறகு 01.09.2022 அன்று அவருக்கு தசைநார், தசைகள் மற்றும்

நரம்பிற்கான அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அறுவை சிகிச்சை பின் கவனிப்பிற்கு பிறகு 09.09.2022 அன்று மருத்துவமனையில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்டிருந்த காயம் கொடுங்காயம் என நான் கருத்துரை வழங்கினேன். அந்த கருத்துரை சான்று **அ.சா.ஆ.64** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆயுதத்தால் அது போன்ற காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1, 10, 12, 14, 16 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

**4, 5, 8, 18 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை என்று குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பு வழக்கறிஞர் தெரிவிக்கிறார்.

**3வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

**6, 7,9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

(சாட்சியம் காணொலி மூலமாக பதிவு செய்யப்பட்டது)

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 6/2023, 64/2023, 33/2024**

**Deposition of Witness for Prosecution : P.W. 31**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர். சங்கர் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 11.02.2026

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் கோவை அரசு ESI மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.08.2022 அன்று நான் நாகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்ட மருத்துவ துறையில் போதகராக பணியில் இருந்தபோது வேளாங்கண்ணி காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் குற்ற எண் 288/2022 வழக்கில் இறந்துபோன 40 வயது மதிக்கதக்க திரு. மனோகர் என்பவரின் பிரேதத்தின் மீதான பிரேத பரிசோதனை செய்வதற்கான வேண்டுகோள் கடித்த்தை முதல் நிலை காவலர் 1046 விஜயசேகரன் அவர்கள் மூலம் காலை 9.30 மணிக்கு பெற்றுக்கொண்டேன். அவரின் அங்க அடையாளங்களை சரிபார்த்து பிரேத பரிசோதனையை அன்றைய தினமே பகல் 10.00 மணிக்கு தொடங்கினேன். அணிந்திருந்த ஆடைகள் இரத்தக்கரையுடன் இருந்தன. உடல் முழுவதும் மரண விறைப்பு தன்மை இருந்தது. குறைவான இரத்த தேக்கம் அவரது முதுகில் பின்பக்கம்

காணப்பட்டது. முகத்திலும், நெஞ்சுபகுதியிலும் காய்ந்த இரத்தக்கறைகள் காணப்பட்டது.

வெளிப்புற காயங்கள்

1. 16x8 cm x தசை அளவு ஆழம் வரையிலான சாய்வான பிளவுபட்ட கனமான வெட்டுக்காயம் தலையின் வலது பக்கத்தில் இருந்தது. காயத்தின் வெளிப்புற விளிம்பு சாய்ந்தவாறு இருந்தது.

2. 20 x 3 cm x எலும்பு ஆழம் வரை சாய்வான பிளவுபட்ட கனமான வெட்டுக்காயம் வலது பக்க மண்டையில் இருந்தது. அதன் வழியே மூளை பிதுங்கிய நிலையில் இருந்தது.

3. 15x3 cm x எலும்பு ஆழம்வரை சாய்வான பிளவுபட்ட வெட்டுகாயம் உச்சி மண்டையில் இருந்தது. அதன் வழியே மூளை பிதுங்கி காணப்பட்டது. இந்த காயமானது 2–க்கு இணையாக இருந்தது.

4. 11x3 cm x எலும்பு ஆழம்வரை கனமான வெட்டுகாயம் இடது பக்க நடு மண்டையில் இருந்தது. இதன் வழியாக மூளை வெளியேறி காணப்பட்டது. இந்த காயமானது 3–க்கு இணையாக இருந்தது.

5. 11x11 cm x தசை ஆழம்வரை ஒரு கனமான சாய்வான பிளவுபட்ட வெட்டுகாயம் முகத்தின் இடது பக்கத்தில் இருந்தது.

6. 3x1x0.5 cm அளவிலான ஒரு சாய்வான வெட்டுகாயம் இடது கை முட்டி மடக்கில் முன் பக்கம் இருந்தது.

7. 2x1x0.5 cm அளவிலான ஒரு சாய்வான வெட்டுகாயம் வலது பெருவிரலில் இருந்தது.

8. 9x3x3 cm அளவிலான ஒரு சாய்வான பிளவுபட்ட கனமான வெட்டுகாயம் இடது உள்ளங்கையில் உள்பக்கத்தில் இருந்தது. அதன் அடியில் உள்ள தசைகள் வெட்டுப்பட்ட நிலையில் இருந்தது.

9. 3x1x1 cm அளவிலான சாய்வான வெட்டுகாயம் இடது மணிகட்டில் இருந்தது.

10. 23x5 cm x எலும்பு ஆழம்வரை செல்லக்கூடிய சாய்வான பிளவுபட்ட கனமான காயம் இடது முன்னங்கையில் இருந்தது. அதன் அடிப்பகுதியில் உள்ள அல்னா எலும்பு வெட்டுபட்டு காணப்பட்டது.

11. 7x1 cm x தோல் ஆழம்வரை செல்லக்கூடிய ஒரு சாய்வான வெட்டுகாயம் இடது புஜத்தில் காணப்பட்டது.

மேலும் தலையை கூறாய்வு செய்தததில் மூளையில் வெளிப்புற காயங்களுக்கு ஏற்ப வெட்டுகாயங்கள் இருந்தன. மண்டையின் அடிப்பகுதி சீராக இருந்தது. மேலும், நெஞ்சு பகுதியை கூறாய்வு செய்தததில் இருதயம் மற்றும் நுரையீரல்கள் சீராக இருந்தன. வயிற்று பகுதியை கூறாய்வு செய்தததில் இறைப்பையில் 2000ml அளவிலான உணவு பொருள் காணப்பட்டது. அசாதாரணமாக எதுவும் இல்லை. மேலும், உள்ளுறுப்புகள் சீராக இருந்தன. இரத்தம் வெளிறிய நிலையில் வெளுர்ந்து காணப்பட்டது. உள்ளுறுப்புகள் இரசாயண பகுப்பாய்விற்கு சேகரித்து அனுப்பினேன். என்னிடம் காட்டப்படும் ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது. பிரேத பரிசோதனை அன்றைய தினமே 11.00 மணிக்கு முடித்து பிரேதமானவர் பல்வேறு வெட்டுகாயங்களால் ஏற்பட்ட அதிக இரத்தபோக்கு மற்றும் அதிர்ச்சியால் இறந்திருக்க கூடும் என்று கருத்து கூறி சான்று வழங்கினேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.60** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தஞ்சை தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட விசரா அறிக்கை **அ.சா.ஆ.61** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தஞ்சை தடய அறிவியல் சைன்டிபிக் வழங்கிய பையாலஜிக்கல் ரிப்போர்ட் மற்றும் அதன் தொடர்ச்சி **அ.சா.ஆ.62 மற்றும் அ.சா.ஆ.63** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1, 10, 12, 14, 16 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.ஆ.61ல் வயிறு, இன்டஸ்டைன், கிட்னி, லிவர் ஆகிய பகுதிகளில் எத்தில் ஆல்கஹால் இருந்ததாக கண்டறியப்பட்டுள்ளது என்றால் சரிதான். 08.10.2022ந் தேதி வேளாங்கண்ணி காவல் ஆய்வாளர் ஆயுதங்களை காட்டி என்னிடம் விசாரிக்கவில்லை என்று சொன்னால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. படிவம் 86–ஐ தங்களுக்கு அனுப்பி உள்ளார்களா என்றால் அனுப்பினார்கள். நான் குழுவாக சடல கூறாய்வு செய்தீர்களா இல்லை தனியாக செய்தீர்களா என்றால் தனியாக தான் சடல கூறாய்வு செய்தேன். பிரேத பரிசோதனை அறிக்கை அசல் அல்ல அசலில் இருந்து எடுத்தது தான் என்றால் சரிதான். இறந்துபோனவரின் இரத்த வகையை சொல்லமுடியாது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் இறந்துபோனவரின் சடல கூறாய்வு செய்யும்போது எந்தவித வீடியோ மற்றும் ஆடியோ பதிவுகள் செய்யபடவில்லை என்றால் சரிதான் ஆய்வாளர் அல்லது மாஜிஸ்ட்ரேட் கேட்டால் அவ்வாறு செய்வோம். இறந்துபோனவரின் சடல கூறாய்வில் CCTV பதிவுகள் இருக்கிறது என்றால் சரிதான். நீங்கள் ஒப்புக்கொள்ளப்பட்ட மருத்துவியல் படி இந்த சடல கூறாய்வை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>4, 5, 8, 18 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணையை நிறுத்தி வைக்க வேண்டி BNSS 231 பிரிவின்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1, 10, 12, 14, 16 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை தழுவிக்கொள்கிறார்.

**<u>6, 7,9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர்  குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

(சாட்சியம் காணொலி மூலமாக பதிவு செய்யப்பட்டது)

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 6/2023, 64/2023, 33/2024**

**Deposition of Witness for Prosecution : P.W. 30**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர். விக்ரம் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 11.02.2026

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் கோவாவில் ரிசர்ஜ்க்காக பணி செய்து வருகிறேன். நாகப்பட்டினத்தில் 2022ம் ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் நான் பணியில் இருந்தேன். 17.08.2022ந் தேதி இரவு 10.20 மணியளவில் 42 வயதுடைய மனோகர் த/பெ. வீராசாமி அவரே அழைத்து வந்தார். அவர் அழைத்துவரும்போது பெரிய வெட்டுகாயத்துடன் மூளை வெளியே வந்தபடி இருந்தார் அவரை 1216186 பதிவு செய்து பிணவறையில் வைத்தேன். அந்த AR Report **அ.சா.ஆ.58** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இரவு 10.30 மணியளவில் மணிவேல் வயது 28, த/பெ. வேதையன் அவரை சரவணன் என்கின்றவர் அழைத்து வந்தார். அவர் கழுத்திலும், கையிலும் வெட்டுக்காயங்கள் இருந்தது. தனக்கு அடையாளம் தெரியாத 4 நபர்கள் வெட்டியதாக சொன்னார். அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன். அந்த AR Register **அ.சா.ஆ.59** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1, 10, 12, 14, 16 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

கு.வி.மு.ச 161(3) வாக்குமூலத்தில் அடையாளம் தெரிந்த நபர்கள் தன்னை தாக்கியதாக வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரிதான்.

**4, 5, 8, 18 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை போலிசார் எந்த தேதியில் எங்கு, எப்போது விசாரித்தார்கள் என்று தற்சமயம் எனக்கு நினைவு இல்லை என்றால் சரிதான். 1, 10, 12, 14, 16 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகின்றபோது கு.வி.மு.ச 161(3) வாக்குமூலத்தில் அடையாளம் தெரிந்த நபர்கள் தன்னை தாக்கியதாக நான் போலிசாரிடம் கூறியதாக நீதிமன்றத்தில் சொல்லிருப்பது மிகுந்த ஆட்சேபணைக்குரியது ஏற்புடையது இல்லை என்று சொன்னால் சரியல்ல. Sickle என்று அ.சா.ஆ.58ல் போட்டுள்ளேன் என்றால் சரிதான். Sickle என்றால் கருக்கருவாள் என்று சொன்னால் சரிதான். கழுத்தில் காயம் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் நினைவு இல்லை நான் கழுத்தில் காயம் இல்லை என்று நினைவு இல்லை என்பது சொல்வது அவ்விதம் இல்லை என்பதால் மழுங்கலாக பதில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இறந்த சடலத்தை கொண்டு வரும்போதே போலிசார் வழக்கின் வரலாறு எதுவும் கொடுக்கவில்லை. சட்டம் சார்ந்த வழக்குகளில் இறந்த நபரை மருத்துவமனைக்கு கொண்டு வரும்போது வழக்கின் வரலாறு போலிசார் கொடுக்க வேண்டும் என்றால் அது எனக்கு தெரியாது. இறந்த விபரத்தை தவிர விபத்து பதிவேட்டில் வேறு எதுவும் குறிப்பிட்டு எழுதவில்லை. இறந்தவர் சம்பந்தமாகவும், காயம் பட்டவர் சம்பந்தமாகவும், நான் அனுமதி அளித்த மருத்துவர் மட்டுமே (அட்மிசன் டாக்டர்). இறந்தவர் சம்பந்தமாகவும், காயம்ப்பட்டவர் சம்பந்தமாகவும் என்னிடம் முதலில் கொண்டுவரப்பட்டபோது நான் சரியாக பரிசோதனை செய்யவில்லை என்றும் தவறாக பரிசீலினை செய்து தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**3, 11, 13, 15, 17 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

4, 5, 8, 9, 18 வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையை தழுவிக்கொள்கிறார்.

**6, 7,9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர்  குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

(சாட்சியம் காணொலி மூலமாக பதிவு செய்யப்பட்டது)

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 6/2023, 64/2023, 33/2024**

**Deposition of Witness for Prosecution : P.W. 29**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர். மணிகண்டன் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 11.02.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்சமயம் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் எலும்பு முறிவு துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.08.2022ந் தேதி அன்று தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவு மருத்துவராக பணிபுரிந்தபோது நாகப்பட்டினம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் 18.08.2022ந் தேதி மதியம் 3.58 மணிக்கு திரு. மணிவேல் வயது 28, த/பெ. வேதையன், சக்திவிநாயகர் கோவில் தெரு, வேளாங்கண்ணி என்பவர் அழைத்து வரப்பட்டார். ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை தொடர்பாக மேல் சிகிச்சைக்காக அவர் அனுப்பி வைக்கப்பட்டிருந்தார். அவரை பரிசோதித்து நாகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 17.08.2022ந் தேதி இரவு 10.30 மணிக்கு பதியப்பட்டிருந்த AR ன் படி உள்நோயாளியாக அன்று

அனுமதிக்கப்பட்டார். அந்த AR copy **அ.சா.ஆ.57** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1, 10, 12, 14, 16 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

**<u>4, 5, 8, 18 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை போலிசார் எந்த தேதியில் எங்கு, எப்போது விசாரித்தார்கள் என்று தற்சமயம் எனக்கு நினைவு இல்லை என்றால் சரிதான். ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை தொடர்பாக மேல் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் என்னிடம் வந்த மணிவேலை உள்நோயாளியாக அனுமதித்துமட்டும் தான் என்னுடைய பணியாகும்.

**<u>3, 11, 13, 15, 17 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4, 5, 8, 9, 18 வழக்கறிஞரின் குறுக்கு விசாரணையை தழுவிக்கொள்கிறார்.

**<u>6, 7,9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.